**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**<u>SESSIONS CASE NO. 27 /2015</u>**

**<u>Deposition of Witness for : PW14</u>**

**Name** : திரு. தமிழரசு
**Father Name** :
**Village** :
**Taluk** :
**Caste** :
**Calling** :
**Religion** :
**Age** :

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 20-07-2022.**

**<u>முதல் விசாரணை</u>** -

நான் தற்போது வெறையூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 1.4.2013 தேதியில் வேட்டவலம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனைக்கு சென்று பகல் 12 மணிக்கு கிடைத்த தகவல் படி மருத்துவமனையில் சிகிச்சையில் உள்நோயாளியாக இருந்த சார்லஸ் வயது 32, த/பெ அமலதாஸ் நடுத்தெரு, வேட்டவலம் என்பவரிடம் வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்று மாலை 18 மணிக்கு வேட்டவலம் காவல் நிலையம் வந்து குற்ற எண் 67/2013ல் பிரிவு 294(பி), 324, 323, 506(2) இ.த.ச. படி வழக்கு பதிவு செய்து விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 18, அன்று இரவே 18.45 சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு, பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தாயார் செய்தேன். வரைபடம் அ.சா.ஆ.19, சாட்சிகள் சார்லஸ், பால்ராஜ், பிரபு அ.சா.2, அ.சா.3, வேளாங்கன்னி, அ.சா.4 டேவிட், அ.சா.7 அந்தோணியம்மாள், அ.சா.5வின்மலர்தாஸ், குழந்தைராஜ், ஜான் துரை அ.சா.14, ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தோம். முதல் அறிக்கையின் அச்சுப்படிவம் மற்றும் புகாரினை உரிய நீதிமன்றத்திற்கு அனுப்பிக்கொண்டேன். மேற்கொண்டு புலன் விசாரணைக்கு அனைத்து ஆவணங்களையும் ஆய்வாளர் சந்தானலிங்கம் அவர்களின் பார்வைக்கு வைத்தேன். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** -

முதல் தகவல் போன் மூலமாக எங்களுக்கு திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்றது. அவர்கள் உடனடியாக பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து விட்டார்கள். ஜிப்மர் மருத்துவமனையில் இருந்தும் எங்களுக்கு போன் மூலம் தகவல் வந்தது. பொதுவாக மருத்துவமனையில் இருந்து வரும்

தகவல் நம்பகத்தன்மை வாய்ந்தவை என்று சொன்னால் சரிதான். அந்த தகவலை நான் உதவி ஆய்வாளர் என்ற முறையில் ஜெனரல் டைரியில் பதிவு செய்ய வேண்டும் என்றால் சரிதான். அந்த விவரத்தை முதல் தகவல் அறிக்கையில் பதிவு செய்ய வேண்டும் என்று சொன்னால் சரிதான். ஜிப்மர் மருத்துவமனைக்கும், வேட்டவலத்திற்கும் இடையே சுமார் 100 கி.மீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரிதான். ஜிப்மர் மருத்துவமனைக்கு நான் மட்டும் தான் சென்றேன். நான் என் நண்பனின் காரை எடுத்துக் கொண்டு மருத்துவமனைக்கு சென்றேன். 100 கி.மீட்டர் செல்ல வேண்டும் என்றால் சுமார் 2 மணி நேரம் ஆகும் என்றால் சரிதான். நான் பாண்டிச்சேரிக்கு போக வேண்டும் என்றால் பாஸ் போட்டு செல்ல வேண்டும் என்றால் சரியல்ல. ஆய்வாளருக்கு தகவல் சொல்லிவிட்டு சென்றேன். எந்தெந்த சாட்சிகளை விசாரிக்க போகிறேன் என்பது சம்மந்தமாக பாக்கெட் டைரியில் குறிப்பு எடுக்க வேண்டும் என்றால் சரியல்ல. நான் 37 ஆண்டுகாலமாக போலீஸ் துறையில் பணியாற்றுகின்றேன். மரண வாக்குமூலம் எப்படி பதிவு செய்ய வேண்டும் என்ற விவரம் எனக்கு நன்கு தெரியும். நான் டூட்டி டாக்கரின் அனுமதி பெற்று தான் வார்டுக்கு செல்ல வேண்டும் என்றால் சரிதான். அ.சா. ஆ.1ல் வாக்குமூலத்தை எத்தனை மணிக்கு ஆரம்பித்து முடித்தேன் என்ற விவரம் இல்லை என்று சொன்னால் சரிதான். ஆனால் பதிவு செய்த நேரம் 14.30 என்று குறிப்பிட்டுள்ளேன். டாக்கடரிடம் அனுமதி பெற்று தான் நான் சென்றேன். டூட்டி டாக்டரிடம் புகாரில் சாட்சி கையெழுத்து பெறவில்லை. அதே போல் சார்லசின் தாயாரோ, அல்லது உறவிக்காரர்களிடமோ மருத்துவமனையில் வைத்து புகாரில் சாட்சி கையெழுத்து பெறவில்லை. சார்லஸ் சொல்லச் சொல்ல நான் புகாரை பதிவு செய்தேன். வாக்குமூலம் கொடுக்கும் நிலையில் சார்லஸ் இருந்தாரா என்பதற்காக சான்றிதழை நான் மருத்துவரிடம் வாங்கவில்லை. ஆனால் அவர் சுயநினைவுடன் இருந்தார். மேலும், சார்லஸ் வாக்குமூலம் கொடுப்பதற்கு Fit State of Mind ல் இருந்தார் என்பதற்கு டாக்டரிடம் சான்றிதழ் வாங்கவில்லை. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பிறகு தான் விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்று சொன்னால் சரிதான். காலதாமதமாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். தாமதாமதமான காரணத்தை புகார்தாரர் சொல்லவில்லை. வேட்டவலத்தில் இருந்து பாண்டிச்சேரியை விட திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு துரிதமாக சென்று விடலாம் என்றால் சரிதான். வேட்டவலம் காவல் நிலையத்தைத் தாண்டித்தான் விழுப்புரத்திற்கோ, பாண்டிச்சேரிக்கோ செல்லமுடியும் என்று சொன்னால் சரிதான். முதல் தகவல் அறிக்கை 1.4.2013 ந் தேதி 18 மணியளவில் பதிவு செய்யப்பட்டது ஆனால் நீதிமன்றத்திற்கு 2.4.2013ந் தேதி காலை 11 மணிக்கு அனுப்பப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். காலதாமதமாக அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. காலதாமத்திற்குரிய காரணம் முதல் தகவல் அறிக்கையில் சொல்லவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் நீதிமன்றத்திற்கு அனுப்பபட்ட நேரம் குறித்து பத்தி 15ல் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் சார்லசிடம் கையெழுத்து பெறவில்லை. அவர்

மருத்துவமனையில் இருந்தார். காலம் 13ல் புலன் விசாரணை எத்தனை மணிக்கு மேற்கொள்ளப்பட்டது என்பது குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையை யார் நீதிமன்றத்திற்கு எடுத்து சென்றார்கள் என்ற குறிப்பும் இல்லை என்று சொன்னால் சரிதான். அந்த காவலரை இவ்வழக்கில் ஒரு தரப்பினராக சேர்க்கவும் இல்லை, விசாரிக்கவும் இல்லை என்று சொன்னால் சரிதான். எனக்கு ஜிப்மர் மருத்துவமனையில் இருந்து ஒரே ஒரு தகவல் தான் கிடைத்தது என்று சொன்னால் சரிதான். சார்லஸ் இறந்து விட்டார் என்று ஜிப்மர் மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற சங்கதி நான் பெற்றுக்கொள்ளவில்லை. ஆய்வாளருக்கு தான் அதைப்பற்றி தெரியும். அந்த அறிக்கையில் சார்லஸ் ஜிப்மர் மருத்துவமனையில் 1.4.2013ல் 14.22 மணிக்கு அனுமதிக்கப்பட்டார் என்ற குறிப்பு உள்ளது என்றால் சரிதான். அவர் 2.4.2013ல் 3 மணிக்கு தலையில் ஏற்பட்ட காயத்தினால் இறந்து விட்டார் என்ற குறிப்பு உள்ளது. நான் முதல் தகவல் அறிக்கை, பார்வை மகஜர், வரைபடம் மற்றும் சாட்சிகளில் வாக்குமூலங்களை நான் என் கைப்பட பதிவு செய்தேன் என்று சொன்னால் சரிதான். புகாரில் எழுதப்பட்டுள்ள கையெழுத்து என்னுடையது இல்லை என்று சொன்னால் சரிதான். என்னுடன் வந்த போலீஸ் ஏட்டு செல்வராஜ் நான் சொல்லச் சொல்ல புகாரை எழுதினார். ஆனால் புகாரை நான் எழுதியதாக பதிவு செய்து கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் சொல்லச் சொல்ல செல்வராஜ் என்பவர் எழுதினார் என்ற குறிப்பு புகாரில் இல்லை என்று சொன்னால் சரிதான். சார்லஸ் இறந்த பிறகு பொய்யான ஒரு புகார் எங்களால் தயாரிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. சர்லஸ் ஜிப்மர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டது சம்மந்தமாக விபத்து பதிவேடு, Treatment, Summary. Chemical Analysis Report, Death Summary. ஆகியவற்றை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். சட்டம் சார்ந்த மருத்துவம் என்று சொன்னால் சரிதான். மேற்சொன்ன ஆவணங்களை தாக்கல் செய்தால் வழக்கு பாதிக்கும் என்பதால் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. வரைபடத்தில் குற்றம் நடைபெற்ற இடம் ஆரோக்கியசாமி முன்னால் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் வரைபடத்தில் அந்தோணியம்மாளின் வீடு காட்டப்படவில்லை. ரத்தம் தோய்ந்த இடம் என்று வரைபடத்தில் காட்டப்படவில்லை. சாட்சி பெரியநாயகத்தின் வாக்குமூலத்தை நான் பதிவு செய்யவில்லை. நான் சொல்வது போல் பாண்டிச்சேரி சென்று சார்லசிடம் புகார் வாக்குமூலத்தை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. சார்லஸ் இறந்த பிறகு அவர் வாக்குமூலம் கொடுத்ததாக காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. ஜிப்மர் மருத்துவமனையில் பணியில் இருந்து மருத்துவர்களை நான் விசாரிக்கவில்லை. புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் சார்லசின் கையெழுத்து இல்லை என்று சொன்னால் சரியல்ல. அவரில் கட்டைவிரல் கைரேகை எடுத்துள்ளேன். எனக்கு தகவல் கிடைக்கப்பெற்றதே 2.4.2013 ந் தேதி 14.35 மணிக்கு என்று சொன்னால் சரியல்ல. நான் முன்தேதியிட்டு புகாரை பொய்யாக தயார் செய்தேன் என்றால்

சரியல்ல. நான் உண்மையிலேயே சென்று புகாரை பதிவு செய்திருந்தால் டாக்டர் மற்றும் சார்லசின் தாயாரிடம் கையெழுத்து பெற்று இருப்பேன் என்றால் சரியல்ல. Death Intimation ஐ பெற்ற மாறன் தலைமை காவலரை விசாரணை செய்ய வில்லை என்றால் ஆய்வாளரை கேட்டால் தான் தெரியும். நான் சொன்ன தேதியில் சொன்ன இடத்தை விசாரணை செய்யவில்லை என்று அனைத்து விவரங்களை காவல் நிலையத்தில் வைத்தே தயார் செய்தேன் என்றால் சரியல்ல. டி.டி என்டரி மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த விவரம் எங்கள் காவல் நிலையத்தில் தயாராக உள்ளது. தேவைப்பட்டால் காட்ட செய்வேன். மருத்துவ ஆவணங்கள் ஜிப்மர் மருத்துவமனையில் உள்ளன என்று சொன்னால் சரிதான்.

ஒம்/- தமிழரசு

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.